OS: 685/2018

Date: 06.12.2023

பெயர் :கணேசன்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை :</u>- 3, 4 பிரதிவாதிகள் தரப்பில்

எனக்கு எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி எனது மனைவி ஆவார். வழக்கு சொத்தின் சர்வே எண், பரப்பளவு தெரியுமா என்றால் தெரியும், பணிக்கனூர் கிராமம், சர்வே எண்.51/2 ல், 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் உள்ளது. நான் சொல்வதுபோல்தான் இதே சர்வே எண்ணில் எனது மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது மனைவி வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்து விவரத்தின் உட்பிரிவுகளை குறிப்பிட்டும், அதன் பரப்பளவை குறிப்பிட்டும் 2 அயிட்டங்களாக தாக்கல் செய்துள்ளார் அந்த விவரங்கள் எனக்கு எதுவும் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் அவருக்கு சொத்தில் உள்ள பாகத்தை கேட்டு வழக்கு போட்டுள்ளார். எத்தனை பாகம் வழக்கில் கேட்டுள்ளார் என்றால் 1/5 பாகம் கேட்டுள்ளார். வழக்கு சொத்து எனது மனைவி ராஜம்மாளின் தந்தைக்கு பாத்தியப்பட்ட தனி சொத்து என்றால் எனது மனைவியின் தந்தைக்கு அவரது தாயார் அளித்த சொத்தாகும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது மனைவியின் தந்தையான கந்தசாமியின் தாயாருக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கந்தசாமி இருந்தபோது அவருக்கு தாவா சொத்துக்களில் முழு உரிமை பாத்தியம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

கந்தசாமிக்கு சொத்தில் முழு உரிமை பாத்தியம் அவருக்கு மட்டும் இல்லை என்று எனது மனைவி தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும், சாட்சியத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, பெருமாயிடம் இருந்து கந்தசாமிக்கு வந்தது என காட்டியுள்ளார். தாவா சொத்தானது எனது மனைவியின் தந்தை கந்தசாமிக்கு பாத்தியப்பட்டதா அல்லது முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட அடிப்படையில் சொத்தில் பாகம் கேட்கிறாரா என்றால் எனது மனைவியின்

தந்தை கந்தசாமிக்கு பாத்தியப்பட்டதன் அடிப்படையில் கேட்கிறார். ஒருவருக்கு ஒரு சொத்து தனிப்பட்ட முறையில் உரிமை உள்ளது என்றால் அவர் அவரது காலத்தின்போதே சொத்துக்களை கிரயம் செய்துகொடுக்கலாம், செட்டில்மெண்ட ஆவணங்கள் ஏற்படுத்திகொடுக்கலாம், பாகம் செய்து கொடுக்கலாம் என்று சொன்னால் சரிதான், சாட்சி தற்போது மீண்டும் சரியல்ல என சாட்சியம் அளிக்கிறார். எனக்கும், எனது மனைவிக்கும் 40 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நானும், எனது மனைவியும் 1983 ல் விருப்பப்பட்டு திருமணம் செய்துகொண்டோம். எங்கள் இருவருக்கும் நடந்த திருமணத்தில் மாமனார், மாமியார் சம்மதம் கொடுத்தார்களா என்றால் எனது மாமியார் சம்மதம் அளித்தார், எனது மாமனாருக்கு எங்களது திருமணம் தெரியாது. எப்போது எனது மாமனார், மாமியாருடன் வந்து சேர்ந்தோம் என்றால் திருமணத்திற்கு பின்பு ஒரு வாரத்திலேயே தீபாவளிக்கு வந்து அவர்களது குடும்பத்துடன் சேர்ந்துகொண்டோம்.

எனது மாமனார் வீட்டு குடும்பத்தில் நடக்கும், நடந்த அனைத்து குடும்ப விசயங்களும் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 08.11.2006 ம் வருடம் எனது மாமனார் அவரது மகளான 3 ம் பிரதிவாதிக்கு 2 ஏக்கர் நிலத்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்று சொன்னால் வில்லங்க சான்று எடுத்து பார்த்ததில் தெரியவந்தது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னென்ன எழுதப்பட்டுள்ளது என நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் 3 ம் பிரதிவாதிக்கு அவர் விருப்பபட்டு திருமணம் செய்துகொண்டதால் அவருக்கு எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என காண்பிக்கப்பட்டு செட்டில்மெண்ட் வாசகங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆணத்தின் படி 3 ம் பிரதிவாதிக்கு எழுதப்பட்ட செட்டில்மெண்ட ஆவணத்தில் எழுதப்பட்ட தேதியிலேயே சொத்தின் சுவாதீனமும் அளிக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது மனைவியின் தந்தை கந்தசாமி அவருக்கோ, அவரது வாரிசுகளுக்கோ எழுதப்பட்ட செட்டில்மெண்ட் சொத்தில் எந்த உரிமையும், பின்தொடர்ச்சியும் இல்லை என எழுதியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதில்லை என்றும் எனது மனைவியின் தந்தை எழுதியுள்ளார் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி பெயரில் உ ள்ள செட்டில்மெண்ட் ஆவணப்படி வருவாய் துறையினர் சர்வே எண்.51/2B என தனியாக 2 ஏக்கர் நிலத்திற்கு உட்பிரிவு

செய்யப்பட்டு நான்கு பக்க எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. பழைய பட்டா எண்.201 என்ற எண்ணில் சர்வே எண்.51/2B ல் மொத்த பரப்பு 2 ஏக்கர் நிலத்திற்கு மனோகர் மனைவி சம்பூரணம் (3 ம் பிரதிவாதி) பெயரில் தனி பட்டாவாக உள்ளது என்று சொன்னால் உள்ளது, எப்போது தனிப்பட்டா பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/- PW2

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.